IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.

OS.No. 25/2001

| DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|

| NAME | ராஜரத்தினம் |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 05.06.2023

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1.தாவா சொத்தை 27.01.2020 அன்று கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள கட்டிடங்கள் உள்பட கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். எனது பத்திர படி கிழக்கு மேற்கு 22 அடியும், வடக்கு தெற்கு 60 அடியும் என்றால் சரிதான். தாவா சொத்து குடியாத்தம் ஆர். எஸ் ரோடில் உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்தை வேறு நபரான அம்மா சொசைட்டிக்கு நான் கிரையம் பெற்று 3 மாதங்கள் கழித்து வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2.நான் கிரையம் பெற்ற சொத்தில் உள்ள கட்டிடங்கள் யசோதா, ராஜசேகரன், விஜயா, ராஜகோபால் ஆகியோர்கள் கட்டிய கட்டிடங்கள் ஆகும். நான் கிரையம் பெற்ற யசோதா அம்மாளின் கணவர் வேலன் 1991 ல் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 1992 ல் கட்டடிடம் கட்டினார் என்றால் எப்போது கட்டினார் என்று தெரியாது. அந்த கட்டிடம் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிய கட்டிடம் என்றால் சரிதான்.

3.தாவா சொத்தில் உள்ள சர்வே எண்.12/5 ஆகும் என்றால் சரிதான். சர்வே எண்.12/5 ல் உள்ள சொத்துக்கள் முதலில் கோவிந்தராஜ், சந்திரம்மள், சுகுணா ஆகியோர்களின் சொத்துக்கள் அவர்கள் மனை பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்தார்கள் என்றால் சரிதான்.

4. எனக்கு விற்பனை செய்த யசோதா அவரது கணவர் வேலன் சிவஞானம் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார். சிவஞானம் என்பவர் மனைபிரிகளாக பிரித்து விற்பனை செய்த கோவிந்தராஜ், சந்திரம்மள், சுகுணா ஆகியோர்களிடமிருந்து சொத்துக்களை வாங்கினார். நான் கிரையம் பெற்ற சொத்தின் அசல் பத்திரம் என்னிடம் தான் உள்ளது என்றால் எனது தெரிந்த நபரிடம் கடன் வாங்கியதால் அவரிடம் உள்ளது. எனது கட்டிடம் குடியாத்தம் ஆர்.எஸ், ரோடில் உள்ள கட்டிடம் தெற்கு புறத்தில் உள்ளது என்றால் சரிதான்.

5.பிரதிவாதியின் இடம் என் இடத்திற்கு மேற்கு புறத்தில் உள்ளது. எனது பத்திரம் படி கிழக்கு மேற்கு 22 அடி என்றால் சரிதான். எனது கிரைய பத்திரத்திலும் சொத்து விவரத்தில் செல்வம் கட்டிடத்திற்கு கிழக்கு புறத்தில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெறுவதற்கு முன்பே பிரதிவாதி அவரது இடத்தில் கட்டிடம் கட்டி யிருந்தார் என்றால் சரிதான். நான் வழக்கில் உரிமை கேட்கிற இடம் நான் கிரையம் பெறுவதற்கு முன்பே செல்வம் இடம் தான் இருந்தது என்றால் சரிதான். பிரதிவாதி அந்த இடத்தில் ஓட்டல் நடத்தி வருகிறார் என்றால் சரிதான்.

6.என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 2 ஆவணம் வேலன் கிரையம் பெற்ற பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 கிரைய பத்திரத்தில் சொத்து விவரத்தில் கிழக்கு மேற்கு 22 என்பது திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் அழிந்து விட்டதால் மேலே எழுதப்பட்டுள்ளது என்னிடம் அசல் ஆவணம் உள்ளது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.

7.எனக்கு கிரையம் கொடுத்த வேலன் வாரிசுகள் கிழக்கு மேற்கு அடி 20 அடி தான் எங்களுக்கு சொந்தம் என்றும் அந்த இடத்தில் 20 அடி தான் உள்ளது என்றும் அதற்கு தான் நான் பணம் கொடுத்தேன் என்றாலும் மீதி 2 அடியை நான் பார்த்துக்கொள்கிறேன் என்று 22 அடியும் கிரையம் பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த வேலன் வாரிசுகளுக்கு 20 அடி தான் சொந்தம் (பூமியில்) நடைமுறையில் 20 அடி தான் உள்ளது என்றால் சரியல்ல.

8.நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். வா.சாஆ.8 27.07.2020 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்புக்கு பிரதிவாதி பதில் அறிவிப்பும் அனுப்பினார். வா.சாஆ.10 ஆன பதில் அறிவிப்பில் பிரதிவாதிக்கு சொந்தமான இடம் என்றும், அது எனக்கு உரிமை இல்லை என்று குறிப்பிட்டிருந்தார் என்றால் தெரியாது.

9.பதில் அறிவிப்பில் எனக்கு உரிமை இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி கிரையம் பெற்ற இடம் நகரராட்சி எல்லைக்குள் வருகிறது என்றால் சரிதான். பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று கூறும் இடமும் நகராட்சி எல்லைக்குள் தான் வருகிறது என்றால் சரிதான்.

10.நான் எனது தாவாவில் பிரதிவாதி எவ்வளவு இடம் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பதற்கான நீளமும், அகலமும் குறிப்பிட்டு தனி சொத்து விவரமாக தாவாவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நகராட்சி நில அளவையர் மதன் என்பவர் அந்த இடத்தை அளந்து பார்த்தார் என்றால் சரிதான். அவரும் கிழக்கு மேற்கு 20 அடி தான் உள்ளது என்று தெரிவித்தார் என்றால் சரியல்ல. என்னுடைய இடம் பிரதிவாதி இடத்தில் வருகிறது என்று குறிப்பிட்டார்.

11.பிரதிவாதி என்னுடைய இடத்தில் ஆக்கிரமித்து 3 க்கு 5 அடி இரும்பு கேட் வைத்துள்ளதாக தாவாவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். பிரதிவாதி என்னுடைய இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று சொல்வது தவறு என்றாலும், 25 வருடங்களாக தற்போது உள்ள நிலையில் தான் அங்கு உள்ளது என்றால் சரியல்ல.

12.எனது தாவா கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முழுமையான பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள வழக்கு மூலம் கற்பனையானது என்றும் இவ்வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது ஆவணங்களில் உள்ள சொத்து விவரம் தவறானவை என்றால் சரியல்ல.

13.நான் ரியல் எஸ்டேட் பிஸ்னஸ் செய்து வருகிறேன். எனது அதிகாரத்தை பயன்படுத்தி முறையான வருவாய் ஆவணங்களை பெறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி இந்த வழக்கில் என்ன பதில் தாக்கல் செய்தார் என்று தெரியுமா என்றால் படித்து பார்த்தேன் தற்போது ஞாபகம் இல்லை.

14.பிரதிவாதி எப்போது கிரையம் பெற்றார் அது சம்பந்தமான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பிரதிவாதி வாங்கிய கிரையம் அளவு தவறு என்றும், அவருடைய ஆவணங்கள் தவறு என்றும் நான் மறுக்கிறேன் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அவர் வாங்கிய சொத்தின் அளவு 11 அடிக்கு 60 அடி அகலம் அவரின் சொத்தில் அவர் வீடு கட்டியுள்ளார். பக்கத்தில் உள்ள சந்து என்னுடையது.

15.பிரச்சனைக்குரிய இடம் முக்கோண வடிவில் உள்ளது என்றால் சரிதான். பிரச்சனைக்குறிய இடத்தின் வடக்கு பக்கம் 0 என்றால் சரிதான். என்னுடைய பத்திரத்தில் உள்ள அளவுகள் தவறானவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 வரைபடம் தவறானவை என்றாலும் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் முதல் பிரமாண வாக்கு மூலத்தில் உள்ள சங்கதிகள் தவறானவை என்றாலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.